viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 017 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 21 புதன்கிழமை (05.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




அரசாங்கத்தை கடுமையாகச் சாடிய

# சுசில் பிரேமஜயந்தவின் அமைச்சுப் பதவி பறிப்பு

## ஜனாதிபதி கோட்டா அதிரடி நடவடிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்த சுசில் பிரேமஜயந்தவின் இராஜாங்க அமைச்சுப் பதவி உடன் அமுலுக்கு வரும் வகையில் பறிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி குறித்த அதிரடித் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

அதற்கமைய சுசில் பிரேமஜயந்த, கல்வி மறுசீரமைப்பு மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சு பதவியிலி 15

---

சுசிலை நீக்குவதைவிட

## பிரச்சினைகளை தீர்ப்பதே அவசியம்

மைத்திரிபால

(கொழும்பு)

தற்போதுள்ள நெருக்கடி நிலையில், சுசில் பிரேமஜயந்தவை பதவி நீக்கம் செய்வதைவிட பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதே அவசியம் என ஸ்ரீ 15

---

## இன்று முதல் நீதிமன்றம் செல்லவுள்ள சுசில்

(கொழும்பு)

இன்று முதல் நான் நீதிமன்றம் செல்லவுள்ளதாக சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களுக் 15

---

## எனது பதவி நீக்கம் அரசியலில் திருப்புமுனைக்கு வழிவகுக்கும்

### பதவி நீங்கியபின் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

எனது பதவிநீக்கம் அரசியல் திருப்புமுனைக்கு வழிவகுக்கும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பதவி நீங்கியபின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே 15

---

ஒழுக்காற்று காரணிக்காக

## சுசில் பதவி நீக்கம்

### அமைச்சர் நாமல் விளக்கம்

(கொழும்பு)

ஒழுக்காற்று காரணிகளை கருத்திற்கொண்டே பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை 15

---

சுசிலின் பதவி நீக்கம்

## அரசின் கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளது

### பிரதான எதிர்க்கட்சி சாடல்

(கொழும்பு)

ஊழல் மோசடிகளிலும் குற்றச் செயல்களிலும் ஈடுபட்டவர்கள், கப்பம் பெற்றவர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுத் 16

---

## சுசிலின் பதவி நீக்கம் தொடர்பில் நானும் கவலையடைகின்றேன்

### அமைச்சர் டலஸ் பகிரங்கமாக தெரிவிப்பு



(கொழும்பு)

"ஜனாதிபதி நினைத்தால் என்னையும் பதவி நீக்கம் செய்யலாம். அதற்கான அதிகாரம் அவருக்கு உள்ளது.

இது கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. சுசில் பிரேமஜயந்த எனது நண்பர். அவரின் பதவி 15

---

அரசை கடுமையாக விமர்சிக்கும்

## மேலும் இரு அமைச்சர்களை பதவி நீக்க ஜனாதிபதி ஆராய்வு

(கொழும்பு)

அமைச்சரவையில் இருந்து மேலும் இரு அமைச்சர்களை நீக்குவதற்கு அரச தலைவர் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களைப் பதவி நீக்குவதன் மூலம் ஏற்படும் அரசியல் பின்னடைவு 15

---

## மாடு முட்டி மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

### மண்கும்பானில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்கும்பான் பகுதியில் மாடு முட்டி மோதியதில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இதில் நல்லையா கணேஸ்வரன் என் 16

---

யாழ்.போதனா வைத்தியசாலையில்

## 3ஆவது மலேரியா நோயாளி இனங்காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மலேரியா நோயாளி ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை இனங்காணப்பட்டுள்ளார்.

குருநகர் பகுதியை சேர்ந்த குறித்த நபர். 15

---

## கொரோனா 18 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றினால் நாட்டில் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ளனர். 15

---

ஓய்வுபெற்ற பிரபல

## அளவையியல் ஆசிரியர் விபத்தில் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற வீதி விபத்தில் பிரபல ஓய்வுபெற்ற அளவையியல் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

---

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. **மணியம் கருணாமூர்த்தி**

[ பிரதி அதியர் – SLPS III]

(B.Ed (Hons) in Sc., M.Ed (Hons), PGDEM, NTD, Ph.D (R))

எமது பாடசாலையில் பிரதி அதிபராக
கடமையாற்றி
யா / அச்சுவேலி சரஸ்வதி மகா
வித்தியாலயத்துக்கு
அதிபராகப் பதவி உயர்வு
பெற்றுச்செல்லும்
திரு. **ம. கருணாமூர்த்தி**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

(9396)

**பாடசாலை நலன்புரிக் கழகம்**
**யா / ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி**
**புத்தூர்**

## மணமகள் தேவை

76, மிருகசீரிடம் 2,1 இல் செவ்வாய், 64 பாவம், கணக்காளர், லண்டன் சிற்றிசன் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

**துர்க்கா திருமண சேவை.**

(9401)

**077 818 5978**

## மணமகன் தேவை

பிறப்பு :- 1989 R.C பெண்
நட்சத்திரம் :- அனுஷம்
தகைமை :- அரச பணி (Hospital)
எதிர்பார்ப்பு :- உள்நாடு

**அரச ஊழியர் விரும்பத்தக்கது.**

(9389)

**076 020 5469**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. **கனகசபை முகுந்தராஜ்**

( பிரதி அதிபர் - B.Sc (Hons), PGDE, SLPS III
யா/வரணி மத்திய கல்லூரி)

மலையென நிலைத்து
மரமென தழைத்து
வானென உயர்ந்து
நிலமெனப் பொறுத்து
வென்றாய் எனும் நற்பெயரொடு
விஞ்சு புகழ் கண்டு
மிஞ்சு வளம் கொண்டு
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

இன்று ( 05.01.2022 ) புதன்கிழமை
யா /கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தில்
அதிபராகக் கடமையேற்கும் எமது பிரதி அதிபர்
உயர்திரு. **கனகசபை முகுந்தராஜ்**
அவர்களது பணி சிறக்க உளமார
வாழ்த்துகின்றோம்.

(C-3416)

**ஆசிரிய நலன்புரிக் கழகம்**
**யா/வரணி மத்திய கல்லூரி**

## துயர் பகிர்கின்றோம்



யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின்
ஆங்கிலப் பாட ஆசிரியை
திருமதி **மேகலா சுதாகரன்**
அவர்களின் அன்புத் தந்தை
திரு. **தம்பையா வேலாயுதபிள்ளை**
அவர்கள் கடந்த 06.12.2021
அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு எமது
ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(9398)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா / சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்**

## மரண அறிவித்தல்



### திருநாவுக்கரசு கணேசன்

( முன்னாள் சாரதி – சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் )

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கணேசன் நேற்று முன்தினம் (03.01.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - நகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - புகணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரமதி அவர்களின் அன்புக் கணவரும் ஜெனாத்தனி, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திணேஸ், லக்ஸ்சா, பபித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் டீயா, மாயா, கவின் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற பொன்னம்பலம், அற்புதராணி, புஸ்பராணி, சண்முகசுந்தரம், இந்திரராசா, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார், காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் ராஜகுமார், மகேந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.01.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அராலி மத்தி,**
**வட்டுக்கோட்டை.**

(9391)

**077 283 3856**

தகவல் :-
**குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

### சின்னையா செல்வராசா



மலர்வு : 20.04.1953
உதிர்வு : 17.01.2021

திதி : 05.01.2022
அபரபக்க திருதியை

ஆளுமையின் சிகரமாக வலம்வந்த
அண்ணலே
பாசமழை பொழியும் செம்மலே
குடும்பம், நண்பர்சூழாம் அனைவரையும்
அரவணைத்துச் சென்ற குணக் குன்றே
நீர் பிரிந்து ஆண்டு ஒன்று ஆனதுவே
காலங்கள் தான் கடந்து சென்றாலும்
எம் மனங்களில் உம் நினைவுகள்
என்றுமே நீங்காது.

**பிரிவுத் துயரில் நாம் குடும்பத்தினர்**

(C-3421)

**அத்துளு அம்மன் கோவிலடி,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோனைவிட பாதிப்பை ஏற்படுத்தும் புதிய கொவிட் திரிபு பிரான்ஸில் கண்டுபிடிப்பு?

(பாரிஸ்)

**பிரான்ஸில் புதிய கொவிட் மாறுபாடு கண்டு பிடிக்கப்பட்டு உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.**

ஐ.எச்.யு. என பெயரிடப்பட்ட, பி.1.640.2 மாறுபாடு, மெடிட்டரேனி இன்ஃபெக்ஷன் நிறுவனத்தில் உள்ள கல்வியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இது 46 பிறழ்வுகளைக் கொண்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஒமிக்ரோனை விடவும் இது தடுப்பூசிகள் மற்றும் தொற்று நோய்களுக்கு அதிக எதிர்ப்புத் திறன் கொண்டது.

உலகின் பெரும்பாலான பகுதிகளில் ஒமிக்ரோன் மாறுபாடு இன்னும் ஆதிக்கம் செலுத்தும் விவகாரமாக மாறியுள்ள நிலையில், ஐ.எச்.யு. மாறுபாட்டின் அச்சுறுத்தல் தற்போது தலைதூக்கியுள்ளது.

இது முதன்முதலில் டிசெம்பர் 10 ஆம் திகதி கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், உலக சுகாதார அமைப்பின் விசாரணையின் கீழ் இது ஒரு மாறுபாடு என்று பெயரிடப்படவில்லை.

அத்துடன் இந்த புதிய மாறுபாடு, செப்டெம்பரில் கொங்கோ ஜனநாயகக் குடியரசில் தோன்றியதாகக் கருதப்படும் பி.1.640 க்கு மரபணு ரீதியாக வேறுபட்டது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (ந)

# முச்சக்கர வண்டியில் வீடு திரும்பினார் சுசில்



(கொழும்பு)

ஜனாதிபதியினால் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சில் இருந்து முச்சக்கர வண்டியில் வீடு திரும்பினார்.

இந்நிலையில் நேற்று கல்வி அமைச்சிற்கு சென்றிருந்த அவர், ஆவணங்களை எடுத்துக்கொண்டு அமைச்சில் இருந்து உத்தியோகபூர்வமாக வெளியேறினார்.

இதன்போது இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்ட வாகனத்தையும் ஒப்படைத்திருந்த காரணத்தினால் அவர் முச்சக்கர வண்டியில் வீடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# பாஷையூர் கடலில் வெளிச்ச வீடு ஐந்து மாடி குடியிருப்பில் இடிதாங்கி

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய பாஷையூர் கடற்கரை பகுதியில் வெளிச்சவீடு அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகளை முன்னெடுப்பது தொடர்பான கள ஆய்வுப் பணிகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுதர்சன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சி.பாலகிருஸ்ணன் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினரால் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

நீண்டகாலமாக பாஷையூர், குருநகர், சாவற்கட்டு, காக்கை தீவு, நாவாந்துறை உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் ஒன்றுகூடி தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பகுதியாக காணப்படும் இந்த இடத்தில் வெளிச்சவீடு இன்மையால் கரையை அடையாளப்படுத்துவதில் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த கடற்றொழிலாளர்கள் விடுத்திருந்த வேண்டுகோளுக்கு இணங்க கடற்றொழில் அமைச்சினால் இத் திட்டத்தை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் அப் பகுதிக்குச் சென்றிருந்த குழுவினர் குடாக்கடல் பகுதியில் ஏற்கனவே முற்றாக செயலிழந்திருக்கும் வெளிச்சவீட்டின் நிலைமைகளை பார்வையிட்டதுடன் அந்த இடத்திலேயே புதிதாக 30 அடி உயரமான புதிய வெளிச்சவீடு ஒன்றை கட்டுமானம் செய்வதற்கான முன்னாயத்த செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் ஐந்து மாடி குடியிருப்பு பகுதி மக்களின் பாதுகாப்பு கருதி அந்தப் பகுதியில் உள்ள நீர்த்தாங்கியில் இடிதாங்கி அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (5-4-33)

# துமிந்த நாகமுவ கைது

(கொழும்பு)

முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாக்முவ கடுவலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்காக அவர் நேற்று மதியம் கொழும்பு, பொரளை பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந)

# தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தையும் உயர்த்தக் கோரிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்களைப் போன்று தனியார் துறையினருக்கும் சட்டத்தின் ஊடாக சம்பளத்தை அதிகரிக்குமாறு தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிப்பதனால் மட்டும் எதிர்பார்த்த முடிவுகளைப் பெற முடியாது என பொதுச் சேவைகள் ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவைக் கூட்டி, சட்டக் கட்டமைப்பின் மூலம் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பொறிமுறையை உருவாக்கும் பொறுப்பு தொழிற்றுறை அமைச்சுக்கு இருப்பதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் அறிவித்தார்.

மேலும் தனியார் துறையினருக்கான சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு தொழிற்றுறை அமைச்சருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக பசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். (ந)


5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சீனியன் சிவமூர்த்தி
(பிரதேச சபை உத்தியோகத்தர்)

திதி:- 05.01.2022

தோற்றம் 15 . 03 . 1962
மறைவு 01 . 01 . 2017

ஆண்டுகள் கோடி ஓடி மறையும்
அழிந்திடுமோ உம் நினைவுகள்
மீளாத்துயில் கொண்டு நீண்ட வழி
சென்றவரே ஆளாத்துயருடன்
உங்கள் நினைவில் தவிக்கின்றோம்



பிராமணன் தோட்டம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(C-3403)
குடும்பத்தினர்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்

பட்டத்திருவிழா

ஜனவரி 14 2022 காலை 9மணி முதல்

1ம் பரிசு ரூபா 25,000.00
2ம் பரிசு ரூபா 20,000.00
3ம் பரிசு ரூபா 15,000.00
மேலும் 3 ஆறுதல் பரிசுகள்

காங்கேசன்துறை வெளிச்சவீட்டு அருகே...



ஜனவரி 08 2022 காலை 7 மணி

1ம் பரிசு ரூபா 10,000.00
2ம் பரிசு ரூபா 5,000.00
3ம் பரிசு ரூபா 3,000.00

ஆரம்ப இடம்: இளவாலை சந்தி

சைக்கிள் ஓட்டம்



ஆரம்ப இடம்: சித்திரமேழிச் சந்தி

மரதன் ஓட்டம்

1ம் பரிசு ரூபா 7,500.00
2ம் பரிசு ரூபா 5,000.00
3ம் பரிசு ரூபா 3,000.00

ஜனவரி 09 2022 காலை 6 மணி

ஏனைய பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் பொங்கல் தினத்தன்று மாலை 3.30 மணி முதல் இளவாலையில்...

தொடர்புகளுக்கு: 0775417659, 0776087318

விளம்பர அனுசரணை: நீதன் நில்லேர்ஸ், இளவாலை, 0777 49 48 49

(9390)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு

**வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளையோர்களுக்கு மீண்டும் மீண்டும் அரிய வாய்ப்புகள்**

**இலவச வகுப்புகள்**

**யோகக் கலை மற்றும் தற்காப்பு கலைப் பயிற்சிகள் ( ஆண் / பெண் இருபாலாருக்கும் )**

1. 6 மாத கால (வார இறுதி) யோகக் கலை இருபாலாருக்குமான பயிற்சி - வட மாகாணத்தின் 5 மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும். பயிற்சி யாழ்ப்பாணத்தில் மட்டும் நடைபெறும்.

2. 3 மாத கால கராத்தே பயிற்சி - பெண்கள் 2ஆம் கட்டம் - யாழ்ப்பர்ணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

பெண் பயிற்றுவிப்பாளராலேயே பயிற்றுவிக்கப்படுகின்றது.

3. 3 மாத கால சிலம்பப் பயிற்சி - இருபாலாருக்கும். ஆண் பயிற்றுவிப்பாளராலேயே பயிற்றுவிக்கப்படும். வட மாகாணத்தின் 5 மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும். பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

4. **விண்ணப்ப முடிவு திகதி : 2022.01.31**

விண்ணப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்ட எமது இணையத்தள முகவரியிலும் எமது அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**
**உதவிச் செயலாளர்,**
**இளைஞர் விவகார அலகு,**
**கல்வி அமைச்சு வ.மா,**
**செம்மணி வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

*Zoom மூலமான வகுப்புகள் மீள் உருவாக்கம் செய்தல்.*

**குறிப்பு** - ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்க வேண்டும்

**போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்**

1. நுண்ணறிவு
2. பொதுஅறிவு
3. கிரகித்தலும் மொழித்திறனும்

**மொழிப்பயிற்சி (சான்றிதழ்) வகுப்புகள்**

1. ஆங்கிலம் - 100 மணித்தியாலங்கள்
2. சிங்களம் - 100 மணித்தியாலங்கள்
3. கொரியன் - 60 மணித்தியாலங்கள்
4. மண்டரின் (சீனமொழி) - 60 மணித்தியாலங்கள்

குறித்த ZOOM மூலமான பயிற்சிகள் மற்றும் வகுப்புகளில் பங்குகொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி கலந்துரையாடல்கள் இடம்பெறும் வேளையில் ஒப்படைத்தல் சிறந்தது.

இவ்வகுப்புகளில் பங்குபற்றுவோருக்கான கலந்துரையாடல்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள வலயக்கல்வி அலுவலகங்களில் இடம்பெறும்.

2022.01.21 (காலை 9:30 மணி) - கல்வி அமைச்சு, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

2022.01.25 (காலை 10:00 மணி) - வலயக்கல்வி அலுவலகம்-கிளிநொச்சி தெற்கு.

2022.01.26 (காலை 11:00 மணி) - வலயக்கல்வி அலுவலகம்-மன்னார்.

2022.01.27 (காலை 10:00 மணி) - வவுனியா தெற்கு

2022.01.28 (காலை 10:00 மணி) - வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு

(மொழிப் பயிற்சி வகுப்புகள் / போட்டிப் பரீட்சை வகுப்புகள்)

மேலதிக தகவல்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தின் மென்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தளம் http://edumin.np.gov.lk.

மேலும் பல செயற்பாடுகள் எமது அலகினால் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் தொடர்ந்தும் எம்முடன் (FB page) இணைந்திருங்கள்.

FB page: http://www.facebook.com./youthnorth,

தொடர்புகளுக்கு : **021 222 2203**

**செயலாளர் - கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்**

(C-3420)

## யாழ்ப்பாண மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 01.02.2022 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந்நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ்ஆலோசனை சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒருமாத கால எழுத்துமூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 85,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **“ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 20.01.2022**

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**
**04.01.2022**

(C-3418)

## மரண அறிவித்தல்

**திருமதி**

## செல்வமலர் பரராஜசிங்கம்



*முள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் விழுசிட்டி தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமலர் பரராஜசிங்கம் நேற்று (04.01.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் நிர்மலாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கனகரத்தினம், நாகம்மா, இராசமணி, இராஜேஸ்வரி, இராசதுரை, செல்லத்தம்பி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெயாநந்தி, உதயசங்கர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், வேலணை), உஷாநந்தி, ராஜீவ்சங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயக்குமார், கிருஷ்ணவேணி, ஜெயபிரகாஷ், தமயந்தி (ஆசிரியை - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் அனுஷன், அபிஷேனா, அக்ஷாயினி, அக்ஷதா, அக்ஷயா, அஜீஸ், அமேஸ் , அனீஸ், அஷ்விதா, அவந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.01.2022) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் விழுசிட்டி தெல்லிப்பளையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொப்புனாவ்ளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

(9405)

**விழுசிட்டி, தெல்லிப்பளை.**

**076 524 4897**
**077 459 8134**

தகவல் :- **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு முடிவதற்குள் அரசாங்கம் சிதறிவிடும்

## ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் அரசாங்கம் வெடித்து சிதறி விடும் என்பது மிகத் தெளிவாக புலப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வெடித்து சிதறும் போது மக்களை பாதுகாக்கக் கூடிய ஒரே தலைமைத்துவத்தை கொண்டுள்ள கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பட்டாளர்களுடனான சந்திப்பில் ருவான் இதனைத் தெரிவித்தார்.

கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி பல சவால்களை எதிர் கொண்டது.

எனினும் கட்சியை வலுப்படுத்த பல தரப்பினர் தற்போது உதவி வருகின்றனர்.

இந்த ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு தீர்மானகரமான ஆண்டு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)




# 31ம் நாள் நினைவஞ்சலி

கடந்த 06.12.2021 அன்று
சிவப்பேறு எய்திய

## அமரர். சின்னத்துரை சிவராசா



அன்னை மடியில்- 1950.10.02
ஆண்டவன் அடியில்- 2021.12.06

மருதடியின் மைந்தனாய் பிறந்து
வடம் பிடித்துத் தேரிழுத்து மகிழ்ந்திருந்து
சுந்தரத் தமிழனாய் நயினையிலே வாழ்ந்து
பிறந்த இடம் பெயராகி "மானிப்பாய்" என்றழைக்க
மனம் மகிழ்ந்து வாழ்ந்தீர்கள் ஐயா
மனையாளை அன்புடனே காத்திட்ட உத்தமரே
கொடுங்காலம் வந்ததுவோ உங்களுக்கு
கூற்றுவனும் உந்தனுயிர் கொண்டு சென்றானோ-ஐயா
கருநோகத் தாயாரும் பதறி அழ
கட்டிய மனையாளும் சிறகொடிந்து வீழ்ந்துவிட
துலாக் கொடி பிடித்து துல்லியமாய் நீர் இறைத்து
வளர்த்துவிட்ட விருட்சங்கள்- நாங்கள்
இங்கே தலை சாய்ந்து வாடி வதங்கிட
வழிமாறிப் போனதுவோ உங்கள் வாழ்வு
கண்ணுறங்க நேரமின்றிக் கணப் பொழுதும்

எங்களுக்காய் உழைத்த ஒளி விளக்கே
உடன் பிறப்பும் உறவுகளும்
ஊரவரும் அயலவரும் குழந்தைகளும்
துயரத்தால் வாடி நிற்க ஓடிச் சென்று
சீக்கிரமாய் மறைந்தது தான் ஏன்? ஐயா
நயினை அம்பாள் சந்நிதியில் சொர்க்க வாசல்
திறந்ததுவோ உங்களுக்கு எங்களுக்காய்
நீங்கள் பட்ட துன்பங்கள் அறிவோம் ஐயா
எங்கள் நெஞ்சங்கள் உள்ளவரை
நிலைத்திருக்கும் உங்கள் நினைவலைகள்
செம்மணத்து ஐம்புலத்தான் திருவடியில் சேர்ந்திருந்து
எங்களுக்கு நல்லருளைத் தாருங்கள்
உங்கள் ஆத்மா சாந்தி பெறுகவென
தில்லைவெளி அம்பாளை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(9353)

8 ம் வட்டாரம், நயினாதீவு. குடும்பத்தினர்.


## இராசிபலன்

05.01.2022
மார்கழி 21, புதன்கிழமை
திருதியை முன்னிரவு 7.12 மணிவரை

திருவோணம் பிற்பகல் 12.59 மணிவரை
சுபநேரம் 5.01-6.31 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை

சந்திராஷ்டமம்: திருவாதிரை
புனர்பூசம்

வளவன்

**மேஷம்:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**ரிஷபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வம்பு வழக்குகளைச் சந்தித்து வளம் காணும் நாள்.

**மிதுனம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பண விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபகாரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செய் தொழிலில் ஆர்வம் கூடும், சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வழிபாட்டில் நம்பிக்கை கூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும்

**தனுசு:** செய் தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உற்சாகமான நாள்.

**மகரம்:** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், உடல் நலனில் அக்கறை தேவை, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செயலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

இரண்டு மனிதர்களை இணைக்கும் பாலத்தின் பெயர்தான் நட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் சமய அறிவை வளர்க்க கண்டியில் சிவபூமி மடம்

## செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன்



(குப்பிழான்)

கண்டி பேராதனை-கலஹா வீதியில் சிவபூமியின் அடுத்த மடம் அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கீரிமலை மடம், குப்பிழானில் சிவபூமி ஞான ஆச்சிரம மடம், மயிலிட்டியில் கந்தபுராண ஆச்சிரம மடம் என்பன சிவபூமி அறக்கட்டளையால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மலையக மக்கள் மத்தியில் சமய அறிவை வளர்ப்பதற்காகவும், அன்ன தானப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் கண்டியில் மடம் அமைக்கப்பட்டு வருவதாகச் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

அத்துடன் இன்னும் சில மாதங்களில் குறித்த பணிகள் நிறைவடைந்து கண்டியிலும் சிவபூமி மடத்தின் அறநெறிப் பணிகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் கடந்த சனிக்கிழமை திருவாசக முற்றோதல் நிகழ்வும், ஆங்கிலப் புத்தாண்டு தின விசேட பூசைவழிபாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சிவபூமி அறக்கட்டளை திருமந்திரத்தின் மூவாயிரம் பாடல்களையும் கருங்கல்லில் பொறித்துக் கிழக்கு இலங்கையில் திருமந்திர அரண்மனையை உருவாக்குகின்ற பெரும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இதற்காக 108 சிவலிங்கங்கள் கருங்கல்லில் உருவாக்கப்பட்டு கோண்டாவிலில் அமைந்துள்ள சிவபூமி மன விருத்திப் பாடசாலையில் அடியவர்கள் வணங்குவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது திருமந்திரத்தின் சுமார் 2000 பாடல்கள் கருங்கற்களில் வடித்து முடிக்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் கிழக்கு இலங்கையில் திருமந்திர அரண்மனை கைகூட வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பாகவும், பிரார்த்தனையாகவும் அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (5-4-18)



இரண்டு சிறுநீரகமும் செயலிழந்த நிலையில் உள்ள அல்வாய் தெற்கைச் சேர்ந்த திலீபன் விஷ்ணுஜனின் மருத்துவச் செலவிற்காக இங்கிலாந்தில் வசிக்கும் கொடையாளிகளால் கணபதி அறக்கட்டளை ஊடாக ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது.

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

மாவைக் கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் மாவை. மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் இ.கபிலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக சி.நாகேஸ்வரனும், உப தலைவராக சே. சபேசனும், செயலாளராக திருமதி அ.சிவகுமாரும் பொருளாளராக இ.கபிலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் 60 வயதைப் பூர்த்தி செய்தோர், 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகள், A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (5)



2022 ஆம் ஆண்டிற்கான யாழ்.மாநர சபையின் கடமைகள் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது துறைசார்ந்த அதிகாரிகளுக்கு யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் கோப்புகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: ரவிசாந்)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை 6 ஆம் திகதி வியாழக்கிழமை சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு மாலை 4 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருதலும் இடம்பெறும். (5)

## மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தலும் நினைவுப் பேருரையும் இன்று 5 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (5-4)

# வினைத்திறனுடன் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு



(குப்பிழான்)

2022 ஆம் ஆண்டுக்கான புதுவருட அரச கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலகம் தேசிய ரீதியில் உற்பத்தித் திறன் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக மாவட்டச் செயலகத்தில் வினைத்திறனுடன் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களுக்குமான மெச்சுரை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.மாவட்டச் செயலகம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டதற்கான உத்தியோகபூர்வ கடிதம் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வடக்கு- கிழக்கு மாகாண சிரேஷ்ட இணைப்பு அதிகாரி பா.பிரதீபனால் மாவட்ட அரசாங்க அதிபரிடம் இந் நிகழ்வில் கையளிக்கப்பட்டது. (5-4-18)

# யாழ். போதனாவிற்கு தற்காலிக பணிப்பாளர் நியமனம்



(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தற்காலிகப் பணிப்பாளராக வடமாகாணத்தின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் கே.நந்தகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இதற்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது. இதற்கமைய கே.நந்தகுமாரன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தனது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராகவிருந்த மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி மருத்துவ மேற்படிப்புப் பயிற்சியைப் பூர்த்தி செய்வதற்காக அண்மையில் லண்டன் பயணமானார்.

சில மாதங்களில் அவர் மீண்டும் தனது கடமைகளுக்குத் திரும்பவுள்ள நிலையில் தற்காலிகமாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை மருத்துவர் கே.நந்தகுமாரன்வடமாகாணத்தின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் தொடர்ந்து செயற்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (5-4-18-33-104)

## புதிய பணிப்பாளர் நியமனம்



(அராலி)

வடமாகாண கலாசாரத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தனது கடமைகளை நேற்று பொறுப்பேற்றார். (5-4-104)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மனிதவள முகாமைத்துவம், (Human Resources Management), சுற்றுலாவும் விடுதி முகாமைத்துவமும் (Tourism and Hotel Operation) மற்றும் கணனி அடிப்படைக் கல்வி ( Computer Literacy) ஆகிய குறுகிய கால கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் இக்கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக

# அரச ஊழியர்களை சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்ற வேண்டும்- தென்கிழக்கு கல்விப் பேரவை

**(கொழும்பு)**

**நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு அரசாங்க ஊழியர்களை அவர்களது சொந்த மாவட்டத்திலுள்ள காரியாலயங்களுக்கு இடமாற்றம் செய்ய அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தென்கிழக்கு கல்விப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.**

இக்கோரிக்கையை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொது நிர்வாக அமைச்சர் உள்ளிட்டோருக்கு மேற்படி பேரவையின் தவிசாளரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.முகம்மட் முக்தார் அவசர மகஜர்களை அனுப்பி வைத்தார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி சூழ்நிலை காரணமாக அரசாங்க ஊழியர்கள் தாங்க முடியாத துயரங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது திண்டாடுகின்றனர். இதனால் கௌரவ கடன்களைப் பெற்று வாழ வேண்டிய நிலை தற்போது அரச ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

விசேடமாக மாகாணம் மற்றும் மாவட்டம் கடந்து வெவ்வேறு மாகாணம் மற்றும் மாவட்டங்களில் உள்ள அரச அலுவலகங்களில் கடமை புரியும் சிறிய, நடுத்தர அரசாங்க ஊழியர்கள் தமது பிரச்சினைகளை வெளியே கூற முடியாத நிலையில் உள்ளனர்.

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் போக்குவரத்து கட்டண உயர்வு, உணவுப் பொருள் விலையேற்றம், தங்குமிட கட்டண உயர்வு, சுகாதார சூழ்நிலை என்பன காரணமாக பல்வேறு மன உளைச்சலுக்கும் அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சம்பள உயர்ச்சிகளும் வழங்கப்படவில்லை. இதன்காரணமாக வெளியிடங்களில் இருந்து கொண்டு தமது மேலதிக செலவீனம் காரணமாக மாதாந்தம் பெறும் சம்பளத்தைக்கூட முழுமையாக குடும்ப தேவைக்கு செலவிட முடியாத நிலையினால் அவர்களது குடும்பங்களில் வறுமை தாண்டவமாடுகிறது.

எனவே, வெளி மாகாணங்களிலும் வெளி மாவட்டங்களிலும் கடமைபுரியும் அரசாங்க உத்தியோகத்தர்களை தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை தீரும் வரையாவது தற்காலிகமாக அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யும் பொறிமுறையொன்றை வகுக்க வேண்டும்.

அல்லது வெளி மாகாணங்களில், வெளி மாவட்டங்களில் கடமை புரிவோருக்கு விசேட கொடுப்பனவை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்வும் அம்மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி-5)

# 500 புதிய பேருந்துகளை கொள்வனவு செய்ய அனுமதி

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு 32 இருக்கைகள் கொண்ட 500 புதிய பேருந்துகளை இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்திய கடன் மானியத் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 32 முதல் 35 இருக்கைகள் கொண்ட 500 புதிய பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கு 2020 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதன்படி, மத்திய அமைச்சரவை நியமித்த நிலையான கொள்முதல் குழு அளித்த பரிந்துரையின்படி, 32 இருக்கைகள் கொண்ட 500 புதிய பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கான ஒப்புதலை இந்திய அசோக் லேலண்ட் நிறுவனத்துக்கு வழங்க போக்குவரத்துத் துறை அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது. (நி)

# உலகின் தலைசிறந்த சுற்றுலாத்தலங்களில் இலங்கையும் உள்ளடக்கம்



(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த 20 சுற்றுலாத் தலங்களில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சீ.என்.என். செய்திச் சேவையினால் தயாரிக்கப்பட்ட சுற்றுலா நாடுகளுக்கான பட்டியலில் இலங்கை இடம்பிடித்துள்ளது.

உலகளாவிய கொரோனா தொற்று நோய்க்குப் பின்னர் உலக நாடுகளை மீண்டும் திறக்கும் போது இந்த இடங்களை கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாக 20 நாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஆன்டிகுவா மற்றும் பார்புடா தளமாக கொண்ட மேற்கிந்திய தீவுகள், லத்தீன் அமெரிக்க நாடான சிலி, பிரான்ஸ், கிரீன்லாந்து, பின்லாந்து, இத்தாலி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலுக்குட் படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் இலங்கையின் கவர்ச்சிகரமான கடற்கரைகள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சுவையான உணவுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1979 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 4<br>கி.பா: 17 செவ் 5 சூரி 6இல்<br>உயரம்:5'<br>தொ.இ: B/6040 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: செவ் 4 சூரி 8 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:. BBA,MPA பட்டதாரி தகவல் உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச உத்தியோகம்<br>தொ.இ:G/7377 |
| பிறப்பு:1990 NON RC<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 20 செவ் 6 சூரி9 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:A/L சொந்தத்தொழில் (கணனி திருத்துநர்)<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும் இந்து, RC உம் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6044 | பிறப்பு: 1998 இந்து நட்சத்திரம்:விசாகம் 3<br>கி.பா: செவ் 9 சூரி 11 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:உயர்தரம்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/7478 |
| பிறப்பு:1981 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா:20 செவ் 8 சூரி 9 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில் (பாதுகாப்பு உத்தியோகத்தர்)<br>எதிர்பார்ப்பு: A/L<br>தொ.இ: B/6080 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:சதயம் 2<br>கி.பா:31 ½ செவ் 3 சூரி 5 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:(B.Sc)விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு:தகுதிக்கேற்ப வரன்<br>தொ.இ:G/7480 |
| பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா:23¼ செவ் 4 சூரி 2இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:O/L சொந்தத் தொழில் (மோட்டார் வாகன திருத்துநர்)<br>தொ.இ: B/6097 | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்:கேட்டை 3<br>கி.பா:25 ¾ செவ் 7 சூரி 12 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: D.O (DS Office)<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/7507 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


- **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம்
  - வயது : 25 இற்கு மேல்
- **அலுவலகச் செய்தியாளர்கள்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 25 இற்கு மேல்
- **ஒப்புநோக்குநர்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 30 இற்கு மேல்
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்** (ஆண்)
  - தகைமை : க.பொ.த.சாதாரண தரம்
  - வயது : 40 இற்கு மேல்

மேலதிக தொடர்புகளுக்கு

076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சுலைமானி கொலைக்கு பழி தீர்ப்பு' எனப் பொறிக்கப்பட்ட ஆளில்லா விமானங்கள் வீழ்த்தப்பட்டன



(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத் விமான நிலையத்தை நோக்கி வெடிபொருட்களை நிரப்பியவாறு பறந்து வந்த இரண்டு ஆளில்லா சிறிய ரக விமானங்கள் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்டன.

ஈராக் இராணுவத்தினருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தலைநகர் பக்தாத்தில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படையினரை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் நோக்குடன் இந்த ஆளில்லா விமானங்கள் ஏவப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு அமெரிக்கா நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானி படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் இத்தாக்குதலுக்கு பழிதீர்க்கும் வகையில் ட்ரோன் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வெடிமருந்து நிரப்பிய இந்த ட்ரோன்களை அனுப்பியது யார்? எனத் தெரியாத போதும் வீழ்த்தப்பட்ட ட்ரோன்களின் இறக்கைகளில் சுலைமானி கொலைக்கு பழிதீர்ப்பு போன்ற வார்த்தைகள் இடம்பெற்றிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான ஈராக்கின் போராட்டத்துக்கு ஆதரவு அளித்து வந்த அமெரிக்கா, கடந்த மாதத்துடன் அந்த ஆதரவை நிறுத்திக் கொண்டது. எனினும், 2,500 இற்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் ஈராக் இராணுவத்தினருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தலைநகர் பக்தாத்தில் முகாமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வருடம் மாறிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்



(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில், பாத்திமா மாட்ரிகல் மற்றும் ராபர்ட் ட்ருஜிலோ தம்பதியருக்கு அண்மையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

குறித்த இரட்டைக் குழந்தைகள் பிறந்த நேரம் வித்தியாசமாக அமைந்துள்ளது.

அதாவது முதல் குழந்தை டிசெம்பர் 31.2021 இரவு 11.45 மணிக்கும், இரண்டாவது குழந்தை சரியாக நள்ளிரவு 12 மணிக்கும் பிறந்துள்ளது.

இதனால், 15 நிமிட இடைவெளியில் பிறந்த குழந்தைகளின் வருடமே மாறிப்போய் உள்ளதாகவும், இது அரிதான நிகழ்வு என்றும் கூறப்படுகிறது. (நி)


# கேள்வி திறத்தல் திகதி பிற்போடல்
# யாழ்ப்பாணம் மாநகரசபை

### வியாபார நிலையங்களில் கட்டணக் கழிவகற்றல் மற்றும் திரவக் கழிவகற்றல் சேவை

யாழ்.மாநகர சபையினால் 30.12.2021 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் கேள்வி திறத்தல் 14.01.2022 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு திறப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 18.01.2022 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு கேள்வி திறத்தல் பிற்போடப்படுகின்றது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**யாழ்.மாநகரசபை.**

(சி-3413)



# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
# 2022ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி நவீன சந்தை கழிப்பறைத் தொகுதிகள் (மலசலகூடத் தொகுதிகள்) இல.01, இல.02 இனை 01.02.2022 ஆம் திகதி தொடக்கம் 31.12.2022 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :05.01.2022 - 18.01.2022 பி.ப.2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி: 19.01.2022 புதன்கிழமை மு.ப.10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :19.01.2022 புதன்கிழமை மு.ப.11.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை.

| விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்வி கோரலில் ஏற்றுக் கொள்ளக்கூடியஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|
| மலசலகூடத் தொகுதிகள் இல 01, இல 02 | 500.00 | 5,000.00 | 110,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்றுபிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு,பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்குமுன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம்,கேள்வித் தொகை,குத்தகைத் தொகை என்பவற்றுக்கு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. கழிப்பறைத் தொகுதிகளை (பொதுமலசலகூடத் தொகுதிகள்) குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் அறவீடு செய்ய முடியாது.
5. அறவிடப்படும் கட்டணத்திற்கு சபையின் முத்திரையிடப்பட்டபற்றுச்சீட்டு அவ்விடத்தில் வைத்தே வழங்கப்படல் வேண்டும். வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்களில் அதற்கானகட்டணம் தவறாது இடப்பட்டிருத்தல் வேண்டும்.
6. தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பங்கை 28.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி (அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும் மேலதிக வரிகள் உட்பட) சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்வதுடன், ஒவ்வொரு தவணைக்கட்டணமும் அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து செலுத்தப்படவேண்டும்.
7. இது சம்பந்தமாக வருமான உத்தியோகத்தர்கள், சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனைமேற்கொள்வார்கள்.
8. கழிப்பறைத் தொகுதிகள் (மலசலகூடத்தொகுதிகள்) பராமரிப்பிற்கான தொற்றுநீக்கிகள்,சுத்திகரிப்புப் பொருட்கள் தங்களாலேயே கொள்வனவு செய்யப்பட்டு தினமும் சபையால் நிர்ணயிக்கப்படும் நேர அட்டவணைப்படி சுகாதாரமான முறையில் துப்புரவு செய்தல் வேண்டும்.
9. சபையால் தேவைப்படும்போது எடுக்கப்படும் தீர்மானங்களிற்கு உடன்பட வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக"கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
11. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவானகேள்விகோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் "தவறுனர்"பட்டியலில் சேர்க்கப்படும்.
13. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
14. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
15. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களைதலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு.ப.மயூரன்**
**தவிசாளர், நல்லூர் பிரதேசசபை**
**2022.01.05**

(சி-3411)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனின் கொலைக்கு நீதி கோரி சடலத்தை வீதியில் வைத்துப் போராட்டம்

(முறிகண்டி)

**குற்றவாளிகளைக் கைது செய்து குற்றச் செயல்களை கட்டுப்படுத்துமாறு கோரி கிளிநொச்சி பரந்தனில் கொலை செய்யப்பட்ட இளைஞனின் சடலத்தை வீதியில் வைத்து ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



எனினும் குறித்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸாரின் வாக்குறுதியை அடுத்து போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இப்போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் ஏ-9 வீதியை மறித்து இடம்பெற்றது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பரந்தன் சந்தியை அண்மித்த பகுதியில் புத்தாண்டு தினமான முதலாம் திகதி இரவு கூரிய ஆயுதத்தால் குத்தி நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையிலே நேற்றைய தினம் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றையதினம் இளைஞனின் இறுதிக் கிரியைகள் இடம் பெற்றதை தொடர்ந்து சடலம் மக்கள் பேரணியுடன் பரந்தன் சந்தியை அடைந்த போது ஏ-9 வீதியை மறித்து இளைஞர்கள், பெண்கள், முதியவர்கள் எனப் பலர் வீதி மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர்.



இப்போராட்டத்தினால் ஏ-9 வீதி ஊடான போக்குவரத்து முழுமையாகத் தடைப்பட்டது.

இந்த நிலையில் தடைப்பட்ட போக்குவரத்திற்கு மாற்று வழிகள் பொலிஸாரினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன் சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குற்றவாளிகளை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், ஏற்கனவே ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இன்றும் (நேற்று) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தார். இதனையடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட்டது. (4-5-100-315-316)

## உடும்பை வேட்டையாடியவருக்கு 30 ஆயிரம் அபராதம்

(கண்டாவளை)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது உடும்பினை வேட்டையாடிய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து உடும்பு ஒன்றும் உயிருடன் மீட்கப்பட்டது. குறித்த நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்த பொலிஸார் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது எடுத்து குறித்த குற்றத்திற்காக 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் உயிருடன் மீட்கப்பட்ட உடும்பினை பாதுகாப்பாக விடுமாறும் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (5-4-315)

## சுகாதார தொழிலாளி மீது தாக்குதல் பிரதேச சபை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் தொழிலாளி மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்தும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஊழியர்களால் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச சபையின் அனுமதி பெறாது நடைபாதையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவரை, நேற்று முன்தினம் அங்கிருந்து அப்புறப்படுத்த முற்பட்ட வேளையில், குறித்த வியாபாரியால் வருமானவரி பரிசோதகர், சுகாதாரப் பரிசோதகர் அச்சுறுத்தப்பட்டதோடு பிரதேச சபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளி மீது தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.



குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தவிசாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

ஆனாலும் குறித்த பகுதியில் தொடர்ந்து வியாபாரம் நடைபெறுவதாக தெரிவித்து பிரதேச சபை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் இடம் பெறும் வியாபார நடவடிக்கை விரைவில் அப்புறப்படுத்தப்படும் என பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன் இதன் போது தெரிவித்தார். (4-5-18-33)

## அரிசி, பருப்பு, தேங்காய் திருடும் நிலை ஏற்பட்டுள்ளது

(தருமபுரம்)

பளை - இந்திராபுரத்தில் புதுவருட தினத்தில் வீடொன்றை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அரிசி, தேங்காய், பருப்பு ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வீட்டின் உரிமையாளர் வெளிமாவட்டம் ஒன்றுக்கு சென்றிருந்த நிலையில் வீட்டின் ஜன்னலை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், அங்கிருந்து அரிசி, பருப்பு மற்றும் தேங்காய் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளதாக முறைப்பாட்டாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(5-4-316)

## மன்னார் மாவட்டத்தில் இதுவரை 36 கொரோனா மரணங்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடத்தின் முதல் 3 நாட்களில் 2 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் மாவட்டத்தில் தற்போது வரை 36 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் 2021 ஆம் ஆண்டு மொத்தமாக 3161 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது. இவர்களில் 34 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை இவ் வருடம் 2022 ஆம் ஆண்டு முதல் மூன்று நாட்களில் இனங்காணப்பட்ட 8 கொரோனாத் தொற்றாளர்களில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாத ஆரம்பப் பகுதியில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்ட போதும் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து, தெரிவிக்கையில்,

தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் 2 ஆவது தடுப்பூசியைப் பெற்று 3 மாதங்கள் கடந்திருந்தால் கட்டாயம் மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேலதிக வலுவூட்டல் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்தும் வகையில் எதிர்வரும் இரண்டு வாரங்கள் அலுவலகங்கள், தொழிற்சாலைகள், சங்கங்கள் போன்றவற்றிற்கு நேரடியாகச் சென்று தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இந்நடவடிக்கைகள் இன்று 5 ஆம் திகதி புதன்கிழமை முசலி பிரதேச செயலகத்திலும் நாளை மறுதினம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்திலும் இடம் பெறவுள்ளன எனத் தெரிவித்தார். (4-6)




சௌபாக்கியா திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மூன்று வீதிகளுக்கு பெட்டிப் பாலங்கள் அமைக்கும் வேலைத்திட்டம் நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் முழங்காவில் அன்புபுரம் இணைப்பு வீதி, முழங்காவில் மருத்துவமனை வீதி, அன்புபுரம் மாதா சொரூப வீதி ஆகிய வீதிகளின் பெட்டிப் பால வேலைகள் நடைபெற்று வருகிறது.

(படம்- கிருஷ்ணகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தலை ஒத்தி வைக்க காரணமாக இருந்தவர் சுமந்திரன்

## இது தொடர்பான விவாதத்திற்கு தயார் என்கிறார் ஹரீஸ்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலை ஒத்திவைக்க காரணமாக இருந்தவர் சுமந்திரன். முடிந்தால் அவர் என்னுடன் விவாதத் திற்கு வரட்டும் என பாராளு மன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறைமாவட்டம்கல்முனை பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை சமகால அரசியல் தொடர்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "தற்போது தமிழ் பேசும் கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் அது தொடர்பில் கையாளப்படும் ஆவணங்கள் கூட எமக்கு காண்பிக்கப்படவில்லை.

இவ்வாறுதான்1987ஆம்ஆண்டு கூட இலங்கை-இந்திய ஒப்பந்தம் முஸ்லிம் தரப்பிற்கு சரியாக காட்டப் படாது ஒப்பந்தம் செய்யப்பட்டது.

13 ஆவது சீர்திருத்த சட்ட மூலம் தலைவர் அஷ்ரப் உட் பட கிழக்கு மாகாண முஸ்லிம்களும் முழுமையாக எதிர்த்த ஒரு சட்டமூலமாகும். தற்போதைய ஒப்பந்த நகலும் வடகிழக்கில் பிறந்த எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட பார்வைக்காக வழங்கப்படவில்லை.

இது பெரும் கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே இது தொடர்பாக வீண் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முடிந்தால் என்னுடன் விவாதத்திற்கு வரட்டும். இது தொடர்பில் நான் மக்களுக்கு உண்மையை சொல்லத் தயங்க மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
# சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நல்லூர் பிரதேசசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் :- 05.01.2022 - 18.01.2022 ம் திகதி பி.ப 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 19.01.2022ம் திகதி மு.ப 10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 19.01.2022ம் திகதி மு.ப 11.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம்,நல்லூர் பிரதேச சபை.

| தொ. இல | கடை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | கோண்டாவில் வீதியில் ஐயப்பன் கோவிலடிக்கு அருகில் உள்ள கடை இல 01 | 420,000.00 | 5,250.00 | 1,000.00 |
| 02 | கோண்டாவில் வீதியில் ஐயப்பன் கோவிலடிக்கு அருகில் உள்ள கடை இல 02 | 420,000.00 | 5,250.00 | 1,000.00 |

01. கேள்விப்பத்திரங்கள் மூன்றுபிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்குமுன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும்,மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
04. ஒரு கேள்விதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட கடைகளிற்கான கேள்வியில் சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு கடையே நீண்டகாலக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.
05. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
07. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விதாரர் தமது கேள்வித் தொகையினை ஒரேதடவையில் 2022.01.28 ஆம் திகதி செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும். தங்களால் செலுத்தப்படும் கேள்வித்தொகை எக்காரணம் கொண்டும் தங்களிற்கு மீளளிக்கப்படமாட்டாது.
08. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகையையும் மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் ஏனைய வரியும் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
09. மாதாந்த வாடகைப் பணத்தினை அடுத்த மாதம் 10ம் திகதிக்கு முன்னராக செலுத்தல் வேண்டும். தவறின் கட்டுப்பணத்தின் 10% தண்டப்பணம் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
10. முற்குறிப்பிட்ட 7, 8 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்
11. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
12. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக் கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
13. சித்திகரக் குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப் பணமாக மூன்றுமாத கடை வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
14. சித்திகரக் குத்தகைதாரர் நல்லூர் பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(c-3415)

**திரு. ப.மயூரன், தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்** 2022.01.05

# செய்தித்துளிகள்

## நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

(கண்டி)

ராஜாங்கனை மற்றும் அங்கமுவ நீர்த்தேக்கங்களை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் குறித்த நீர்த்தேக்கங்களுடன் தொடர்புடைய பிரதேச வாழ் மக்கள் அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

## எதிர்க்கட்சித் தலைவர் திருகோணமலைக்கு விஜயம்



(திருமலை)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தார்.

திருகோணமலையில் எதிர்வரும் இரு தினங்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்ற நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்குமுகமாக நேற்றுக் காலை திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்த அவர், அங்கு விசேட பூஜை வழிபாடுகளில், கலந்து கொண்டார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 1000 | 1000 |
| தக்காளி | 200 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 300 | 250 | 300 |
| கரட் | 350 | 480 | 600 |
| பூசணி | 80 | 70 | 100 |
| புடோல் | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 350 | 600 |
| வெண்டிக்காய் | 240 | 170 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 140 |
| பயற்றங்காய் | 200 | 350 | 250 |
| லீக்ஸ் | 340 | 250 | 350 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 650 | 650 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 |
| போஞ்சி | 350 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 260 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- |
| முள்ளங்கி | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 50 |
| வல்லாரை | 30 | 32 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்படுவோர் நாட்டில் சடுதியாக அதிகரிப்பு

**(கொழும்பு) நாட்டில் பார்வைக் குறைபாடு காரணமாகப் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என கண் நோய் தொடர்பான விசேட நிபுணர்களின் ஆலோசகர் நிரேஷ் பிரதஹான் தெரிவித்தார்.**

பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடும் போது நாட்டில் கண் பார்வைக் குறைபாடுகளில் பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

80 சதவீத கண்பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்குக்கு கண் சிவத்தல், கண்ணீர் வருதல், வலி ஏற்படல் என்ற அறிகுறிகள் ஏற்படக்கூடும்.

இந்த அறிகுறிகளுக்கு முன்னதாகவே அது குறித்த பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

இல்லாவிடின் கண் பார்வைக் குறைபாடுகளால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பதைத் தடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# இரண்டு மாதங்களுக்கு தேவையான மருந்துகள் மட்டுமே கையிருப்பில்

(கொழும்பு)

நாட்டில் இரண்டு மாதங்களுக்கு தேவையான மருந்துகளே கையிருப்பில் உள்ளதாக ஔடத இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஔடத இறக்குமதிக்கான முன்பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் நாணயக் கடிதத்தைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக ஔடதங்களுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஔடத இறக்குமதிக்காக முன்னர் வழங்கப்பட்ட முக்கியத்துவம் தற்போது வழங்கப்படுவதில்லையென அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 80 சதவீதமானவை இறக்குமதி செய்யப்படுகின்றன.

எனினும், இறக்குமதிக்கான தடைகளை உடனடியாக நீக்காவிடின் பல அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (நி)

# உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயத்தின் விலைகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயத்தின் விலை சந்தையில் குறைவடைந்துள்ளது.

இவற்றின் வர்த்தக பொருட்களுக்கான வரி குறைக்கப்பட்டதே இதற்கான காரணமாகும்.

நிதியமைச்சு கடந்த 31 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் சம்பந்தமாக சுங்க வரியை 30 ரூபாவினால் குறைத்திருந்தது.

சந்தையில் இவற்றுக்கு இருந்த விலையை குறைப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்கமைவாக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய நிதியமைச்சரின் அங்கீகாரத்துடன் சம்பந்தப்பட்ட வரி குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கொவிட்டை மறந்த சுற்றுலாப் பயணிகள்



(ஹெற்றன்)

புத்தாண்டு விடுமுறையை தொடர்ந்து நுவரெலியா முழுவதும் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் பாரிய அளவில் குவிந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது.

கடந்த 31 ஆம் திகதி இரவு நுவரெலியாவுக்கு பயணித்துள்ள சுற்றுலாப் பயணிகள் கிரெகரி ஏரி உட்பட நுவரெலியாவின் பல இடங்களில் ஒன்றுகூடி நேரத்தைச் செலவிட்டனர்.

அவ்வாறு வந்த சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு எதிராக செயற்படுவதனை அவதானிக்க முடிந்துள்ளது.

இதனால் புதிய கொவிட் அலை இம்முறை நுவரெலியாவில் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதென செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான நெருக்கடியான காலப்பகுதியில் சுற்றுலாக்களை மக்கள் தவிர்க்க வேண்டும் என சுகாதார அமைச்சு பல தடவைகள் அறிவித்திருந்ததை குறிப்பிடத்தக்கது. (நி)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சுபாவம்

ஒவ்வொருவருக்கும் என்று தனித்தனி சுபாவம் உண்டு. விரல் ரேகைகள் எப்படி ஒரே மாதிரியாக இராதோ, அதேபோன்று பல்வேறு மனிதர்களின் சுபாவங்களும் மாறுபட்டே இருக்கும்.

நம்மோடு பழகுபவர்களின் சுபாவங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பமோ தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நினைப்போ என்றேனும் நமக்கு ஏற்பட்டது உண்டா என்று நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மற்றவர்களின் இயல்பை ஆழமாக அறிந்து உணர்வதன் மூலமாக நமக்கு ஏராளமான நன்மைகள் இருக்கின்றன.

முதலாவதாக அவரிடம் நம்முடன் கூடிய நட்பு-உறவு இறுகுகிறது. அதே நபர் எதிரியாக இருந்தால் அவரை வெற்றி கொள்ள முடிகிறது.

பொதுவாகவே இதன்மூலம் நமக்கு ஆக வேண்டிய காரியங்கள் நம் விருப்பப்படியே நடக்க ஆரம்பிக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால் நம் இஷ்டப்படியெல்லாம் மற்றவர்களை ஆட்டிப்படைக்க முடிகிறது.

மற்றவர்களின் சுபாவத்தைப் புரிந்து கொள்வது என்றால் ஏதோ மேலோட்டமான ஏரோட்டம் போன்றதல்ல. இது ஓர் ஆழ்ந்த நோக்காக இருக்க வேண்டும். கூர்ந்து கவனிக்கும் இயல்பு வேண்டும்.

ஆடுகிற மாட்டை ஆடிக்கறக்கணும் பாடுகிற மாட்டை பாடிக்கறக்கணும் என்றுள்ள பழமொழியின் விளக்கமே மேற்கூறியவையாகத்தான் இருக்க முடியும்.

நம் இயல்போடு ஒத்துப் போகிறவர்களிடம் நாம் இயல்பாகவே பழகலாம்.

ஆனால் மற்றவர்களது இயல்புக்கு ஏற்ப நாம் நம் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். மாறாக எல்லோரிடத்திலும் நம் சுபாவம் எப்படியோ அதே வழியில் அணுகினால் தோல்வியே மிஞ்சும்.

இத்தகைய அணுகுமுறை எல்லோர் விடயத்திலும் வெற்றியைத் தராது என்று வாதாடுபவர்களின் கருத்தை நான் மதிக்கிறேன்.

ஆனால் பெரும்பாலானவர்களின் விடயத்தில் அது கைகூடும் விடயமாக இருக்கும் என்பதில் இரண்டாம் கருத்தே இருக்க முடியாது. மற்றவர்களுக்கு ஏற்ப நான் என் இயல்பை மாற்றிக் கொள்ள முடியாது என்று சொல்லுபவர்கள் சரியான பத்தாம் பசலிகளாக இருப்பார்கள். அல்லது தலைக்கனம் பிடித்து அலைபவர்களாக இருப்பார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## கோபக்கார முனிவர்



சுவாமி! அப்படியில்லை. காட்டுவாசி, அழகான இளம்பெண், வழியில் கண்ட இளைஞன் ஆகியோருக்கு சாபம் கொடுத்து தங்கள் தவவலிமை நஷ்டமாகிவிட்டது.

நான் மட்டுமல்ல இனி நீங்கள் யாருக்கு சாபம் கொடுத்தாலும் அது பலிக்காது. போகட்டும் நீங்கள் என்னிடம் பெற வந்த புண்ணியத்தின் ஒரு பகுதியை உங்களுக்கு இப்போது நான் அளிக்கிறேன்.

"அந்தப் புண்ணியத்தினால் நீங்கள் சாபமிட்டவர்கள் எல்லோருக்கும் இந்தக் கணத்திலிருந்து சாபம் நீங்கிவிடும். உங்கள் தவ வலிமையை இந்த விநாடியிலிருந்து நீங்கள் மீண்டும் பெற்று விட்டீர்கள். நீங்கள் விரும்பினால் இப்போது எனக்கு சாபம் கொடுக்கலாம். அது பலிக்கும்!" என்றார்.

தனது செய்கைகளினால் அவமானம் அடைந்த சுதீவர் மாதவனுக்கு நன்றி கூறிவிட்டு மௌனமாக தன் குருவைத் தேடிச் சென்றார்.

வரும் வழியில், தான் சாபமிட்டவர்கள் மறுபடியும் தன் நிலைக்கு மாறி இருப்பதை அவர் கண்டார். தனது குரு சுசாந்தரிடம் நடந்தவற்றைக் கூறி அதற்கு விளக்கம் கேட்டார்.

"தவத்தினால் பல சக்திகளை அடையலாம். ஆனால், தன் கடமையைச் சிறப்பாக செய்பவனும், பிறருக்கு உதவி செய்வதையே இலட்சியமாகக் கொண்டவனுமான ஒரு மனிதன் ஒரு தவயோகியை விட அதிக புண்ணியம் செய்தவன் ஆகிறான்!" என்றார்.

"குருவே! இப்போது மாதவன் தான் செய்த புண்ணியத்தை தானம் செய்து விட்டான். ஆகையால் அவனுடைய சக்தியும் குறைந்து விடும் அல்லவா?" என்று சுதீவர் சந்தேகம் கேட்டார்.

"மற்றவர்களுக்காகத் தன் புண்ணியத்தையே தானம் செய்தால் அதுவே பெரிய புண்ணியம்.

மாதவனின்சக்தி குறையவில்லை. முன்னைவிட இப்போது அதிகமாகி விட்டது!" என்றார் சுசாந்த முனிவர்.

"குருவே! முன்னைவிட என் தவவலிமையை அதிகமாக்குவேன். நான் மீண்டும் காட்டுக்குத் தவம் புரியச்செல்கிறேன்!" என்று கூறி விடை பெற்றார் சுதீவர். (முற்றும்)

# மகாபாரதம்

294



உண்மையை மறைப்பது கூடப் பொய்தான் என்பதை உணர்வாயாக. ஆயினும் நீ செய்த ரகசியச் செயலைச் சிலர் அறிந்து கொண்டனர். ஒன்றை ஒருவர் அறிந்தால் அது ரகசியம். இருவர் அறிந்தால் அது பரமரகசியம்.

நீ குறிப்பிட்ட இருவரும் இரவும், பகலும் ஆவர். அறுவர், பருவ காலங்கள். பகல், இரவு, பருவ காலங்கள் இவற்றிற்கு எந்த ரகசியமும் தெரியாமல் இருக்காது.

"நாம் செய்தது சரியானதா?" என்னும் அச்சத்தில் தான்.. "நீ கணனோடு கண்ணினை நோக்கி என் பத்தினியைக் காத்த தன்மையை என்னிடம் கூறாமல் மறைத்து விட்டாய்.

நன்மை செய்வதில் கூட ஒருமுறை உண்டு. நீ தவறான எண்ணத்தோடு அப்படிச் செய்யவில்லையென்பதை நான் நம்புகிறேன். ஆனால் உலகம் அதை அவ்வாறு கருதவில்லை" என்பதை உணர்வாயாக.

இரகசியத்தை யாரும் மறைத்துவிட முடியாது. பிறருக்கு நன்மை செய்யும்போது கூட அது பிறரால் பாராட்டத்தக்கதாக இருக்க வேண்டும். ஐயத்திற்கு இடம் அளிக்கக் கூடாது என்பவை இக்கதையால் உணர்த்தப்படும் நீதிகளாகும்.

**காலத்தின் நியதி - வினையின் பயன்**

போர்க்கள அழிவிற்காக தருமர் வருந்துகையில், அவரது துயரத்தைப் போக்க பீஷ்மர் உரைத்த கதை.

தருமர், பீஷ்மரிடம் "பாவத்திலிருந்து விடுபடுவது எப்படி? எனவினவ பீஷ்மர் கூறலானார்.

"தருமா, எல்லாம் கர்மபலத்தால் ஏற்படும் என்பதனை எமன், கௌதமி, வேடன், பாம்பு, காலம். இவர்களின் உரையாடல் மூலம் விளக்க விரும்புகிறேன்.

முன்னொரு காலத்தில் கௌதமி என்று ஒரு கிழவி இருந்தாள். அவளது மகன் பாம்பு கடித்து இறந்தான். அதைக்கண்ட அர்ச்சுனகன் என்னும் வேடன் சினம் கொண்டு கயிற்றால் பாம்பை சுருட்டிக் கொண்டு கௌதமியிடம் வந்து, "இந்தப் பாம்பைஎப்படிக்கொல்ல வேண்டும் சொல்" என்றான்.

"இந்தப் பாம்பைக் கொல்ல வேண்டாம். என் மகன் சாவு கர்ம பலத்தால் நேர்ந்தது. பாம்பிற்கும், இவன் சாவிற்கும் தொடர்பில்லை. இது விதி. மதியுள்ள யாரும் தன்னைப் பெரியவனாக நினைக்க மாட்டான்.

தம் புண்ணியத்தால் மக்கள் உலகில் துன்பமின்றி இனிதாக வாழ்கின்றனர். பாவம் உள்ளவர்கள் துன்புறுகின்றனர். இந்தப் பாம்பைக் கொல்வதால் இந்தக் குழந்தை பிழைக்கவா போகிறது. இதன் உயிரைப் போக்குவதால் உலகில் யார் இறக்காமல் இருப்பர்?" என்று கௌதமி கூறினாள்.

வேடன், "எப்போதும் யோக நிலையில் இருக்கும் சான்றோர்களுக்கு உலக விடயம் புரிவதில்லை. மேல் உலகைப் பற்றிய அவர்கள் உபதேசங்கள் மிக நல்லனவே. எனினும் இப்பாம்பை நான் கொல்லத்தான் போகிறேன்.

அமைதியை நாடுபவர்கள் அதற்குரிய காலத்தை நழுவ விடுவார்களா? காரியத்தில் கண்ணாய் இருப்பவர்கள் சமயம் நேரும்போது, அக்காரியத்தை உடனே செய்து துயரத்தை அகற்றுவார்கள். ஆதலால் இப்பாம்பைநான்கொன்றபின் நீ உன் துன்பத்தை விட்டுவிடு" என்றான்.

அது கேட்ட கௌதமி, "எம் போன்றவர்க்கு துயரம் ஏது? நாள் தோறும் துயரப்படுபவர்கள் சிறுவர்கள்! எனக்கு அத்தகைய துயரம் இல்லை. இந்த பாம்பின் மீது சினம் கொல்லாதே. உனது வைராக்கியத்தை போக்கிவிடு" என்றாள்.

வேடன் "இதைக்கொல்லுவதால் எனக்கு புண்ணியமே உண்டாகும். இது தேவ பூஜையை விடச் சிறந்ததாகும். பல காலம் முயன்று பெறக் கூடிய புண்ணியம் இத்தகைய பாவிகளைக் கொல்வதால் உடனே கிடைக்கும்" என்றான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமத்துக்கு மாறானவனின் பிறப்பும் பிறருடைய அன்னத்தைப் புசிக்கின்றவனின் பிறப்பும் பயனற்ற பிறப்பாகும். – வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆட்சியைக் காப்பாற்றும் முருத்தெட்டுவ ஆனந்த தேரர்

பஸ்மாசுரன் என்பான் சிவனை நோக்கிக் கடுந்தவம் செய்தான்.

அவனின் தவவலிமை கண்டு கருணை கொண்ட சிவப்பரம்பொருள் அவன் முன் தோன்றி பஸ்மாசுரனே! என்ன வரம் வேண்டும் கேள் என்றார்.

உடனே அவன் சிவனே! நான் யாருடைய தலையில் கைவைத்தாலும் அவர் எரிந்து சாம்பலாக வேண்டும் என்ற வரத்தை தந்தருள்க என்றான். அப்படியே ஆகட்டும் என்றார் சிவன்.

சிவன் தந்த வரம் உண்மைதானா? என்பதைச் சோதித்து பார்க்க நினைத்த பஸ்மாசுரன், வரம் கொடுத்த சிவனின் தலையில் தன் கையை வைக்க முற்பட்டான்.

இப்போது வரத்தைக் கொடுத்த சிவன் அவனிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஓடுகின்றார்.

நிலைமையைப் புரிந்து கொண்ட விஷ்ணு பகவான், அழகிய பெண்ணுருத்தாங்கி பஸ்மாசுரன் முன் தோன்றி நிற்க, அவன் அப்பெண் மீது காதல் கொண்டு திருமணம் செய்யும் தன் விருப்பத்தைக் கூறுகின்றான்.

அதற்கு அந்தப் பெண் சம்மதம் தெரிவித்தாளாயினும் ஒரு நிபந்தனை என்றாள்.

பெண்ணே! என்ன நிபந்தனை சொல் என்று ஆவலோடு கேட்டான் பஸ்மாசுரன்.

அன்பனே! என்னைத் திருமணம் செய்வதாயின் நீவிர், ஆற்றில் ஸ்நானம் செய்து அனுட்டானம் பார்த்துவிட்டு வரவேண்டும் என்றாள்.

இதோ! இப்போதே வருகிறேன் என்று விரைந்த பஸ்மாசுரன் ஆற்றில் நீராடிவிட்டு, அனுட்டானம் செய்யும் பொருட்டு தன்கையில் திருநீற்றை எடுத்து அனுட்டான விதிமுறைக்கமைய முதலில் தன் தலையில் கை வைத்தான்.

அவ்வளவுதான் அவன் கை அவன் தலையில் பட்டதும் அவன் எரிந்து பஸ்பமானான் என்பது புராணக்கதை.இந்தப் புராணக்கதைக்குள் இருக்கக் கூடிய தந்திரோபாய வியூகமே இங்கு கவனிக் கப்பட வேண்டும்.

ஆம், பிரதமர் பதவியில் இருந்து விலகியிருப்பதற்கு தீர்மானித்திருந்த மகிந்த ராஜபக்ஷ இப்போது, பிரதமர் பதவியில் இருந்து விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என அறிவித்துள்ளார்.

உடல்நலக்குறைவும் ஆட்சித் தரப்பின் போக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகுந்த மன உளைச்சலைக் கொடுத்திருந்தது.

இந்நிலையில் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதன் மூலம் தனது அரசியல் கௌரவத்தைப் பாதுகாக்க முடியுமென மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருந்தார்.

எனினும் இப்போது அவர் தனது தீர்மானத்தை மாற்றியுள்ளார். இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ தனது தீர்மானத்தை மாற்றுவதற்கு இராஜ வியூகம் அமைத்தது யார் என்று கேட்டால், முருத்தெட்டுவ ஆனந்த தேரர் என்பதே பதிலாக இருக்கும்.

ஆம், பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷ விலகுவாராயின், ஆட்சித் தரப்பு ஆட்டம் காண வேண்டிவரும்.

மகிந்த இல்லாதவிடத்து அந்த ஆட்சியை சிங்கள மக்கள் ஒருபோதும் மதிக்கமாட்டார்கள்.

எனவே ஆட்சி தொடரவேண்டுமாயின், பிரதமர் பதவியில் மகிந்த ராஜபக்ஷ இருக்க வேண்டும் என்று ஆனந்த தேரர் இறுக்கமான நிபந்தனை விதிக்க, அதுவே பிரதமர் அலுவலகத்தின் அறிக்கையாக வெளிவந்திற்று.

## பொருட்களுக்கான தட்டுப்பாடு நீங்கும்வரை மக்கள் வரிசையில் நிற்க வேண்டும்

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் காணப்படும்வரையில் மக்கள் வரிசையில் நிற்கவேண்டி வருமென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் விரைவில் சரி செய்யப்படும்.

காஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடு 10 அல்லது 15 நாட்களுக்குள், மண்ணெண்ணைக்கான தட்டுப்பாடு ஒரு மாதத்துக்குள் சரி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் வரிசைகளில் நிற்பதாகவும் நாட்டு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் பதவிகளை விலகப் போவதாகக் கூறும் அமைச்சர்கள் எவரும், பதவிகளில் இருந்து விலகப் போவதில்லை எனவும் அவர் கூறினார்.(ம)

## முல்லை. மூங்கிலாற்றில் 13 வயது சிறுமி கொலை

### சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மூங்கிலாறு பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 13 வயதுச் சிறுமி கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குடும்பத்தினரின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமியின் உறவினர்களான ஐவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவந்த நிலையில் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களை மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-281)

## 13 தமிழக மீனவர்களின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் விளக்கமறியல் 18 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி கைது செய்யப்பட்ட குறித்த 13 மீனவர்களும், மறுநாள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று இரண்டாவது தவணையாக குறித்த வழக்கு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 13 மீனவர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் நீதவான் நீடித்து உத்தரவிட்டார். (ம-18,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 06 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, 3 ஆவது குறுக்குத் தெரு, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, மாதனை, நெல்லண்டை, வல்லிபுரக் கோவில், பருத்தித்துறை வீதி, புனிதநகர், சிவப்பிரகாசம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** நந்திக்கடல் 11, இ.எஸ்.ஆர். இராணுவமுகாம், நந்திக்கடல் 12, சி.எல்.ஐ. நந்திக்கடல் 16, இ.எஸ்.ஆர். வற்றாப்பளை 59ம் பிரிவு இராணுவமுகாம், நந்திக்கடல் 6வது எஸ்.எல்.ஏ. எஸ்.சி இராணுவ முகாம், வற்றாப்பளை விமானப் படை முகாம் 1 மற்றும் 2, இராணுவ முகாம், வற்றாப்பளை எரிபொருள் நிரப்பு நிலையம், நந்திக்கடல் எஃப். எம்.ஏ. (எம்.எல்.டி) இராணுவ முகாம், வற்றாப்பளை விசேட அதிரடிப் படை தலைமையகம், கேப்பாபிலவு, வற்றாப்பளை, நாவற்காடு, முள்ளியவளை, பிலாக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு 10ம் வட்டாரம் வற்றாப்பளை கோவில் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், சூடு வெந்தபுலவு, குருக்களூர் மன்னார் வீதி, நீலியமோட்டை, பறயனாளங்குளம், குருக்களூர்,

மேலும் 2 மணியிலிருந்து மாலை 5 மணி வரை இலங்கை வங்கி, சுகாதாரத் திணைக்களம், கச்சேரி, தேசிய சேமிப்பு வங்கி- வவுனியா, ம்க்கள் வங்கி, வவுனியா இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா வைத்தியசாலை, நீர்வழங்கல் (கச்சேரி), பிரதேச செயலக அலுவலகம்-மன்னார் வீதி, புகையிரத நிலைய வீதியடி, வவுனியா நகரம் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

## மீசாலையில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறியது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை ஐயா கடைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

சமாதான நீதவானான 80 வயதான இராசரத்தினம் என்பவரது வீட்டிற்கு வெளியே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட சமையலறையில் வைக்கப்பட்டிருந்த எரிவாயு அடுப்பே இவ்வாறு வெடித்துச் சிதறியுள்ளது.

இதன்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.(ம-18,30,33)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

'நரேந்திரரைச் சுட்டிக் காட்டி குருதேவர் பேசலானார்,

'இந்தப் பையனைப் பாருங்கள்! இங்கே இப்படி அமர்ந்திருக்கிறான். சுட்டிப் பையன் தன் தந்தையின் அருகில் இருக்கும்போது அப்படியே மரியாதைக்காரனாக இருப்பான். முற்றத்தில் விளையாடப் போய்விட்டால், ஆளே மாறிவிடுவான். இவர்கள் நித்திய சித்தர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், சம்சாரத்தில் ஒருபோதும் கட்டுப்படுவதில்லை. சற்றே வயது வந்ததும் விழிப்புணர்வு பெற்றுவிடுகிறார்கள், இறைவனை நாடிச் சென்றுவிடுகிறார்கள். இவர்கள் உலகிற்கு வருவது பிறருக்குப் போதிப்பதற்காகவே. உலகப் பொருட்கள் எதுவும் இவர்களுக்கு இன்பம் தருவதில்லை. இவர்கள் ஒருபோதும் காமினீ காஞ்சனத்தில் பற்று வைப்பதில்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ-து) பதவி வெற்றிடங்கள்

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கணக்காளர் 104/08 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் : 18425 - 23275
230X10 - 250X10
தகைமைகள் : 2017/07 இன் படி

அ) கூட்டுறவு பணியாளரின் 09வது சம்பளத்திட்ட பதவியில் கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகபட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை. இத் தகைமையானது கணக்கியல் அல்லது வியாபாரப் புள்ளி விபரவியல் அல்லது வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்/ இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா அல்லது இதற்கு சமனான தகைமை அல்லது மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால் அல்லது தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

வயதெல்லை : 18 - 45
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவுதிகதி : 19.01.2022

### வங்கிச்சேவை முகாமையாளர் 111/09 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் : 18010 - 22510
220X10 - 230X10
தகைமைகள் : 2017/07 இன் படி

அ) கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை அல்லது மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் வங்கியியல் துறையில் முகாமை அல்லது மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் வங்கியியல் துறையில் முகாமை அல்லது மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

வயதெல்லை : 18 - 45
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவு திகதி : 19.01.2022

### உட்துறைக் கணக்காய்வாளர் 105/09 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் 14/2018 : 18010 - 22510
220X10 - 230X10
தகைமைகள் : 2017/07 இன் படி

அ) கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்ட பதவியில் முகாமை நிலைப்பதவியில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை அல்லது மேற்பார்வை நிலைப் பதவியில் அல்லது நிறைவேற்றாளர் நிலைப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா அல்லது இதற்குச் சமனான தகைமை அல்லது மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால் அல்லது தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.
க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

வயதெல்லை : 18 - 45
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவு திகதி : 19.01.2022

### எழுதுநர் 302/15 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் 04/2018 : 15545 - 18245
130X10 - 140X10
தகைமைகள் : 2017/07 இன் படி

அ) கூட்டுறவு ஊழியர் 16வது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் அல்லது காசாளர் அல்லது கணனிப்பக்க உருவாக்குநர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

வயதெல்லை : 18 - 45
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவு திகதி : 19.01.2022

### சாரதி 312/13 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் 04/2018 : 16365 - 19265
140X10 - 150X10
தகைமைகள் : 2017/07 இன் படி

அ) 05ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து அல்லது லொறி அல்லது பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

வயதெல்லை : 18 - 45
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவு திகதி : 19.01.2022

### விற்பனை பிரதிநிதி 307/13 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் 04/2018 : 16365 - 19265
140X10 - 150X10
தகைமைகள் : 2017/07 இன் படி

அ) கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டப் பதவியில் மேற்பார்வை அல்லது நிறைவேற்று நிலைப் பதவியொன்றில் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்பார்வை அல்லது நிறைவேற்று நிலைப் பதவியொன்றில ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

வயதெல்லை : 18 - 45
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவு திகதி : 19.01.2022

### எரிபொருள் நிரப்புநர் 313/16 வெற்றிடம் - 02

சம்பளத்திட்டம் 04/2018 : 15135 - 17685
120X10 - 135X10
தகைமைகள் : 2017/07 இன் படி

அ) கூட்டுறவு ஊழியர் 17வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் ஊழியர் கனிஷ்ட சாதாரண தரப்பத்திரம் அல்லது 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

வயதெல்லை : 18 - 45
(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவுதிகதி : 19.01.2022

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி தலைவர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு 19.01.2022 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால், மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

(C-3414)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 பேர்...

கொரோனாவால் நாட்டில் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 55 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## 3ஆவது...

தென்னாபிரிக்காவிலிருந்து அண்மையிலேயே யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஒரு மாதத்தில் யாழ்.போதனா மருத்துவமனையில் இனங் காணப்பட்ட மூன்றாவது மலேரியா நோயாளி இவராவார்.

முன்னதாக மல்லாகம் மற்றும் ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் மலேரியாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-18,33)

## எனது பதவி...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை எதிர்கால அரசியலுக்கு சிறந்த ஆசீர்வாதமாக அமையும். மக்கள் ஆதரவுடன் பாராளுமன்றிற்கு தெரிவானேன். ஒருமுறைகூட தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்லவில்லை.

மூன்று ஜனாதிபதிகளின் நிர்வாகத்தின் கீழ் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளேன். இராஜாங்க அமைச்சு பதவி நீக்கப்பட்டமை பெரியதொரு விடயமல்ல.

மேலும் 20ஆவது திருத்தத்தின் ஊடாக பிரதமரை நீக்கும் அதிகாரம் கூட ஜனாதிபதிக்கு உள்ளது.

எனவே அந்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்த முடியாது என்றாலும் பெரும் அரசியல் திருப்பு முனைக்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை என்றும் குறிப்பிட்டார். (ம)

## இன்று முதல்...

கமைய, சுசில் பிரேமஜயந்த இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பதவி நீக்கம் தொடர்பில் சுசில் பிரேமஜயந்தவிடம் நேற்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியமைக்கு, இன்று முதல் மீண்டும் தனது சட்டத்தரணி பணியை ஆரம்பிக்கவுள்ளதாக பதிலளித்தார்.

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து என்னை நீக்கியிருப்பதாக அறியக் கிடைத்தது. அது பெரிய விடயம் இல்லை. 2000ஆம் ஆண்டுதான் நான் அமைச்சரானேன். இன்றிலிருந்து நீதி மன்றத்திற்கு செல்வேன் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதன்போது தெரிவித்தார். (ம)

## அளவையியல்...

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரான வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம் (வயது-74) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு மாவட்ட செயலகத்தை அண்மித்த வீதியில் ஒருவருடைய கார் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் சடுதியாக காரின் கதவு திறக்கப்பட்டுள்ளது.

அந்நேரம் அந்த வீதியால் பயணித்த ஆசிரியர் காரின் கதவு மீது மோதி வீதியில் விழுந்துள்ளார். அதன்போது, பின்னால் வந்த பேருந்து ஆசிரியர் மீது மோதியுள்ளது.

குறித்த ஆசிரியர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்ற உடன் காயம் அடைந்தவரை வைத்தியசாலையில் உடனடியாக அனுமதிக்க விபத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என உயிரிழந்த ஆசிரியரின் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில், காரின் சாரதியும் பேருந்து சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-18,33)

## சுசிலின்...

நீக்கம் தொடர்பில் நானும் கவலை அடைகின்றேன்."

இவ்வாறு அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசை விமர்சிப்பது அமைச்சரவையில் உள்ளவர்களுக்குத் தடையா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நான் இந்த ஊடக சந்திப்புக்கு வரும் வழியில்தான் அது தொடர்பில் அறிந்தேன். அரசமைப்பின் பிரகாரம் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே ஜனாதிபதி அந்த முடிவை எடுத்துள்ளார். இது கட்சியால் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. சுசில் பிரேமஜயந்த எனது நண்பர். அவரின் பதவி நீக்கம் தொடர்பில் நானும் கவலை அடைகின்றேன். ஜனாதிபதி நினைத்தால் என்னையும் நீக்கலாம்.

அரசை விமர்சித்ததால்தான் அவர் நீக்கப்பட்டார் எனக் கூறப்படுவதை ஏற்க முடியாது. தற்போதைய அமைச்சரவையில் சுதந்திரம் இருக்கின்றது. உதய கம்மன்பில போன்றவர்கள் நீதிமன்றத்தைக்கூட நாடியுள்ளனர்" என்றார். (ம)

## சுசில் பிரேம...

ருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு கூட்டுப்பொறுப்புக்களை மீறி விமர்சனங்களை முன்னெடுத்த மற்றுமொரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரும் நீக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அண்மைய நாட்களில் அரசாங்கத்தையும் அரச தீர்மானங்களையும் கடுமையாக விமர்சித்திருந்தனர். (ம)

## பிரச்...

லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ம)

## ஒழுக்...

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் விமர்சித்துள்ள ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள் குறித்து எதிர்வரும் நாட்களில் உரிய தீர்மானம் எடுக்கப்படும். அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களில் குறைபாடுகள் காணப்படலாம். குறைகளை சுட்டிக்காட்டும் பொறுப்பு அனைத்து தரப்பினருக்கும் உண்டு.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்ட முறையான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். பொது இடங்களில் கருத்துரைக்கும்போது தவறான நிலைப்பாடுகள் தோற்றம் பெறும். அமைச்சரவை உறுப்பினர்கள் மாத்திரமல்ல ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம)

## மேலும் இரு...

நிலை பற்றியும் இதன்போது கோட்டாபய வால் கவனம் செலுத்தப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசை கடுமையாக விமர்சிக்கும் மேலும் இரு இராஜாங்க அமைச்சர்களையே பதவி நீக்குவது தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ தற்போது ஆராய்ந்து வருகின்றார் என்று அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

விரைவில் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளது. அதன்போது இராஜாங்க அமைச்சுப் பதவிகளிலும் மாற்றம் வரவுள்ளது. அவ்வேளையில் இவ்விருவரும் நீக்கப்படலாம் எனத் தெரிய வருகின்றது. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### மஹஜன சம்பத

திகதி 2022/01/04
சீட்டிழுப்பு இலக்கம் 4637
R 6 5 4 1 0 9

### தன நிதானய

திகதி - 2022.01.04
சீட்டிழுப்பு இலக்கம் - 667
Q 06 28 31 45

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 04.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2932
K 04 16 23 67

### சுபிரி வாசனா

திகதி 2022/01/04 – சீட்டிழுப்பு இலக்கம் 1657
சுப்பர் இலக்கம் 11 – வெற்றி இலக்கங்கள் 10 32 50 57

### மெகா பவர்

திகதி 04/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0985
J 07 03 04 05 78

### செவன

திகதி 04/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 340
A 09 40 51 62

### அத கோடிபதி

சீட்டிழுப்பு இல: 1440 – வர்ணம்: இள நீலம் – சீட்டிழுப்பு திகதி: 04.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,491,120
வெற்றி இலக்கங்கள் 06 58 62 74 – B

### சனிதா

சீட்டிழுப்பு இல: 3775 – வர்ணம்: இள நீலம் – சீட்டிழுப்பு திகதி: 04.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,685,960
வெற்றி இலக்கங்கள் 11 32 39 54 – T

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1614 – நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 04.01.2022 – தினம் செவ்வாய்
V 08 10 26 54
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 52,893,305/=

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 117 – சீட்டிழுப்பு திகதி 04.01.2022 – செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 33 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,708,900/-

### ஜாதிக சம்பத

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,616,147/=
திகதி 04.01.2022 – வெற்றி வாரம் 3326 – வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 23 25 27 33
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 14,095,847/=

### லக்ன வாசனா

சீட்டிழுப்பு வாரம் 790 – 2022.01.04 செவ்வாய்க்கிழமை
T 38 10 17 28 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 201,307,381/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் கொள்...

திருக்காத அரசாங்கம், சுசில் பிரேமஜயந்த போன்ற நாட்டிற்கு நன்மையளிக்கும் விடயங்களைச் செய்யக்கூடிய ஒருவரை அவரது பதவியிலிருந்து நீக்கியிருக்கின்றது.

இதன்மூலம் அரசாங்கத்தின் கொள்கைகள் என்ன? அவை யாருடைய நலனை முன்னிறுத்தியவை? என்பதை நன்கு புரிந்துகொள்ள முடிகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.(ம)

## மாடு முட்டி...

னும் 4ஆம் வட்டாரம், மண்கும்பான் என்னும் முகவரியைச் சேர்ந்த 62 வயதான 8 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். உயிரிழந்தவரின் மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற் கொண்டார். (ம)


### வேலை வாய்ப்புக்கள்

O/L அல்லது A/L தகைமையுடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். அடிப்படை ஆங்கில அறிவு எதிர்பார்க்கப் படுவதுடன் எம்முடன் நிரந்தரமாக தொழில் புரிவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.....

AVAILABLE BRANCHES :
Jaffna, Vavuniya, Kilinochchi, Mannar
வயதெல்லை : 18 - 28 வரை
தொழில் பிரிவுகள் :
விநியோகஸ்தர், மேற்பார்வையாளர்கள்,
அலுவலக உதவியாளர்,
முகாமையாளர், Telecallers
Inner Circle
மாதாந்தம் 18,000/= தொடக்கம் 45,000/= + EPF+ETF
நீங்கள் செய்யவேண்டியது. : Name, NIC No, Place
ஆகியவற்றை எமது 076 756 5659 WhatsApp இலக்கத்திற்கு அனுப்புங்கள்.
(9404)
076 770 7759

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
### ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9403)
076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
### றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(9402)

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஊரெழு பலாலி வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் ஊரெழு பொக்கணை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டு உள்ளது.
(9406)
077 658 5999

### சோ(f)பா கிளீனிங்
தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப் புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள்.
(9399)
077 224 2787

### ROYAL PHYSICS
(புதிய பாடம் ஆரம்பம்)
Unit 8 : Current Electricity
2022 BATCH
05.01.2022
புதன் 6.00 P.M - 8.00 P.M
Unit 2.7 : Hydrostatics
2023 BATCH
07.01.2022
வெள்ளி 5.30 P.M - 7.00 P.M
இடம் :- AAT கல்வி நிலையம்
சுன்னாகம்
M.KUGANESWARAN
B.Sc (Hons)
(C-3419)
077 872 2897, 077 428 7373

### பணிப்பெண் தேவை
யாழ். நகரில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிபப் பெண்ணொருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(9395)
076 981 9896

### பான்சி & கொட்டன் புடவைகள் மலிவு விற்பனை



யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக
ரூ.3000/- முதல் 10,000/- வரை விற்பனை செய்யக்கூடிய
ரூ.1000/- மட்டுமே
6 நாட்களுக்கு மட்டுமே!
ஜனவரி 05 - 10 வரை
WITH NEW STOCK
காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

இடம்: நல்லூர் மயிலூரன் அரங்கம் திருமண மண்டபம்.
590/5, பருத்தித்துறை வீதி, நல்லூர் (நல்லூர் கோவில் முன்பாக), யாழ்ப்பாணம்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக எமது புடவைக் காட்சியறைகள் மூடப்படுவதால்
சமநிலையான 90% விலைக் கழிவுடன்
யாழ்ப்பாணத்துப் பெண்களே நீங்கள் இதுவரை கண்டிராத புத்தம் புதிய டிசைனர் புடவைகள்

- பெங்களூர் டிசைனர் சேலை, Rs. 1000/-
- மணிப்பூர் கோட்டா, செக் சேலை, Rs. 1000/-
- ப்யூர் ஷி/பான் டிசைனர் சேலை, Rs. 1000/-
- தானி ஷி/பான் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பாந்தனி பிரிண்ட் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பேப்பர் சில்க் டிசைனர் சேலை, Rs. 1000/-
- 90 கிராம் டிசைனர் சேலை, Rs. 1000/-
- மைசூர் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பனாரசி பார்ட்டிவேர் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பேன்சி பார்ட்டிவேர் சேலை, Rs. 1000/-
- டிஷ்யூ டிசைனர் சேலை, Rs. 1000/-
- இத்தாலியன் க்ரேப் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பெல்காம் டிசைனர் சேலை, Rs. 1000/-
- காஷ்மீரி டிசைனர் சேலை Rs. 1000/-

மறவாதீர்கள் எங்களிடம் எந்த சேலை எடுத்தாலும் ஒரே விலை
ரூ. 1000/- மட்டுமே
(9388)
WANTED SALES GIRLS | ☎ 0766 427996 | ENTRY FREE

### வேலை வாய்ப்பு
நெல்லியடியில் இயங்கும் மிக்சர் உற்பத்தி நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.
(C-3412)
077 923 1658

### காணி வீடு விற்பனைக்கு
உடுவில் நூலக வீதி, காங்கேசன்துறை வீதியில் சுமார் 500 மீற்றர் தூரத்தில் சுற்று மதில்கள், கிணற்றுடன் கட்டிய நிலையில் உள்ள இருமாடி வீடு விற்பனைக்கு உண்டு. சுன்னாகம் மற்றும் மருதனார்மட சந்தை 10 நிமிடத்தில் சென்றுவரக்கூடிய சிறந்த அமைதிச் சூழல்.
(9386)
077 900 0362

### விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-3381)
0768226240 DHL

### வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்
கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும்
ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்
(C-3382)



IELTS Life Skills B1
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777
R1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.